கரியகோவில்வளவில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஆலோசனைக்கேற்ப நடைமுறைப்படுத்தப்படுமென்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

117—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***37901—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தொகுதி, தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகம் நல்ல நிலையிலே உள்ளது. மேலும், வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பகுதியில் தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்), வட்ட வழங்கல் பிரிவு மற்றும் தேர்தல் பிரிவு மற்றும் கூட்ட அரங்கம் ஆகியவற்றைத் தனியே கட்ட பொதுப் பணித்

2015 ஏப்ரல் 1]

துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க நீதிநெறியோடு ஆட்சி தந்த தமிழக மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களை தமிழக மக்கள் கடவுளாக வணங்கி வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே, மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதம் தொட்டு வணங்குகிறேன். தாராபுரம் தொகுதி, தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மிகவும் பழமை வாய்ந்த கட்டடம். ஆங்கிலேய ஆட்சியின்போது கட்டப்பட்ட கட்டடம். சுமார் 100 ஆண்டுகளுக்குமுன் அக்கட்டடம் கட்டப்பட்டது. அதில் வட்டாட்சியர் அலுவலகம், வட்ட வழங்கல் அலுவலகம், நில அளவை அலுவலகம், சமூகப் பாதுகாப்புத் திட்ட அலுவலகம் போன்ற அலுவலகங்கள் செயல்படுவதால் இட நெருக்கடியும் உள்ளது. ஆகவே, புதிய அலுவலகம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி வருவாய்த் துறை நிருவாகம் புத்துயிர் பெற்றிருக்கின்றது என்பதை நிரூபித்துக் காட்டுகின்ற வகையிலேதான் வருவாய்த் துறை வரலாற்றிலே இதுவரை இல்லாதவகையில், காணாத வகையில், கடந்த

4 ஆண்டுகளில் ரூ.342.1 கோடியில் 351 வருவாய்த் துறை கட்டடங்களை வாரி வழங்கி, உருவாக்கித் தந்த ஒரே தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.125.59 கோடி நிதி ஒதுக்கீட்டிலே, புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட 34 வட்டாட்சியர் அலுவலகங்கள் உட்பட 59 வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறும் கட்டடம் நல்ல நிலையில் இருக்கின்ற காரணத்தினாலும், பழைய கட்டடமாக இருந்தாலும் அது பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் இருக்கின்ற காரணத்தினாலும், கூடுதலாகத் தேவைப்படுகின்ற கட்டடங்களைக் கட்டுவதற்குப் பொதுப் பணித் துறை மூலமாக அங்கே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, வருவாய்த் துறையின் சேவைகளை விரைவாக வழங்குவதற்கும், அவை மக்களுக்கு எளிதாகக் கிடைப்பதற்கு உறுதிசெய்தும், இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற வகையிலே வருவாய்த் துறையினை வழிநடத்தி வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைக் கனிவோடு பரிசீலிக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனையினைப் பெற்று கூடுதலாகக் கட்டடம் கட்டித் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*